அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல: 24/97

எனது இல: 111/578 ஈ 51 டிசி

அரசாங்க நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

சுதந்திர சதுக்கம்,
கொழும்பு–07.
1997–11...... ஆந் தேதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்!

## முழுச்சம்பளத்துடனான கல்வி விடுமுறைகளைப் பெற்றிருக்கும் சந்தர்ப்பங்களில் கையொப்பமிட வேண்டிய உடன்படிக்கையும்

## முறியும்–தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XV

தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XV இன் பிரிவு 4:7 பின்வருமாறு திருத்தப்படுகிறது.

4:7 உடன்படிக்கையில் ஏதேனும் ஒரு நிபந்தனையை அல்லது நியதியை மீறுமிடத்து பயிற்சிக்காக செய்யப்பட்ட மொத்தச் செலவை உத்தியோகத்தர் மீளச் செலுத்த வேண்டுமென்று அவ்உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆயினும் " கட்டாயச் சேவைக்காலம்" தொடர்பில் மட்டும் பின்வரும் தளர்த்தீடுகள் செய்யக் கூடியவாறான நிபந்தனைகளும் அவ் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டும். உடன்பட்டுள்ள கட்டாயச் சேவைக் காலத்தில் குறைந்த பட்சம் சரி அரைவாசிப் பங்கு சேவையில் ஈடுபடாத உத்தியோகத்தர்களிடமிருந்து உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள மொத்த அபராதத் தொகையை அறவிடுதல் வேண்டும். உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள முழுக் காலப் பகுதியின் சரி அரைவாசியோ அல்லது அதற்கு மேற்பட்ட காலமோ சேவையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து கட்டாயச் சேவைக் காலத்திலிருந்து சேவையாற்றுவதற்காக மேலும் மீதியாக உள்ள விகித சமப்படி கணிக்கப்பட்ட ஒரு தொகை அறவிட வேண்டும்.

" பயிற்சிக்காக செய்யப்பட்ட செலவென்பது " பயிற்சிக்காக செய்யப்பட்ட மொத்தச் செலவாகுமென்பதுடன், பயிற்சிக் காலக் கட்டத்தில் பயிலுநருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளப் படிகள், பிரயாணச் செலவுகள், பயிற்சிக் காலத்தில் பயிலுநருக்காக ஏதேனும் விசேட படிகள் வழங்கப்பட்டிருப்பின் அந்தப்படி வைத்திய செலவுகள் பயிலுநருக்கு அல்லது அவருக்காக அந்தப் பயிற்சி நெறிக்கு செய்யப்பட்ட கட்டணங்கள் முற்பணங்கள் படிகள் ஆகியவை அதில் உள்ளடங்கும்.

02. இதன் பிரகாரம் தாபன விதிக்கோவையின் 8 ஆம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உடன்படிக்கையின் (13) ஆம் பந்தி திருத்தப்படுவதுடன் திருத்தப்பட்ட (13) ஆம் பந்தி இணைப்பு 1 ஆக இருக்கும்.

03. இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 1996–12–04 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும்.

ஒப்பம்/டிக்ஸன் நிலவீர
செயலாளர்
அரசாங்க நிருவாக உள்நாட்டலுவல்கள்
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

11/kal/2